தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
மக்கள் தொடர்பு அலுவலகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஜெ. வெங்கட் பிரபு Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 – 6611302
நிகரி: 0422 – 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 11-2-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தைப்பட்டத்திற்கான காய்கறிகளின் விலை முன்னறிவிப்பு - தக்காளி, கத்திரி மற்றும் வெண்டை

விவசாயிகளின் தைப்பட்ட நடவுக்கு ஏதுவாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கும் வேளாண் விற்பனை தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையத்தின் பின்புல அலுவலகம் முக்கிய காய்கறி பயிர்களான தக்காளி, கத்திரி மற்றும் வெண்டை ஆகியவற்றுக்கு கீழ்கண்ட விலை முன்னறிவிப்புகளை வெளியிடுகின்றது.

**தக்காளி**

தமிழ்நாட்டில் தக்காளி சாகுபடியானது ஆடிப்பட்டம், கார்த்திகைப்பட்டம் மற்றும் தைப்பட்டங்களில் பரவலாக மேற்கொள்ளப்படுகிறது. தமிழ் மாதங்கள் தை மற்றும் மாசி அறுவடை காலம். ஆந்திரா மற்றும் கர்நாடகா மாநிலங்களின் அறுவடை காலத்துடன் ஒரே சமயத்தில் மேற்க்கொள்ளப்படுகிறது. அதனால், மைசூர் மற்றும் ஆந்திர மாநில பகுதிகளிலிருந்து ஒட்டன்சத்திரம் மற்றும் கோயம்புத்தூர் சந்தைகளுக்கு வரத்து அதிகரித்து பண்ணை விலையை பாதிக்கின்றன.

தலைவாசல் மற்றும் ஒசூர் சந்தைகளில் வரத்து அதிகரித்து காணப்படுகின்றது. தமிழ்நாடு வேளாண்மை துறையின் புள்ளி விவரங்களின் படி கடந்த அக்டோபர் மற்றும் நவம்பர் 2014 மாதங்களில் தக்காளி சாகுபடி பரப்பு முக்கிய மாவட்டங்களான சேலம் (844 எக்டர்), திண்டுக்கல் (810 எக்டர்), கிருஷ்ணகிரி (1966 எக்டர்), தருமபுரி (1128 எக்டர்) மற்றும் கோயம்புத்தூர் (609 எக்டர்) அதிகரித்ததன் காரணமாக தற்போதைய தைப்பட்ட அறுவடை சமயத்தில் வரத்து அதிகரித்துள்ளது. இருந்தபோதிலும், டிசம்பர் 2014 - ஜனவரி 2015 காலகட்டங்களில் சாகுபடி பரப்பு சேலம் (483 எக்டர்), திண்டுக்கல் (358 எக்டர்), கிருஷ்ணகிரி (1524 எக்டர்), தருமபுரி (1125 எக்டர்) மற்றும் கோயம்புத்தூர் (124 எக்டர்) மாவட்டங்களில் கார்த்திகைப்பட்ட சாகுபடியை காட்டிலும் குறைந்து காணப்படுகிறது. இதனால் வரும் மாசிப்பட்ட அறுவடை சமயத்தில் வரத்து குறைந்து காணப்படும்.

வரும் மார்ச் - ஏப்ரல் 2015ல் குறைவான வரத்து இருந்தபோதிலும் மைசூர், பெங்களூர் மற்றும் ஆந்திர மாநில பகுதிகளின் வரத்தினால் விலை உயர வாய்ப்பு இல்லை. பிப்ரவரி – ஏப்ரல், 2015 மாதங்களில் விலை நிலவரம் பற்றி விவசாயிகள் அறிந்து கொள்ள ஏதுவாக கடந்த 11 வருடங்களில் கோயம்புத்தூர், ஒட்டன்சத்திரம், ஒசூர் மற்றும் தலைவாசல் உழவர் சந்தைகளில் நிலவிய தக்காளி விலை விவரங்கள் ஆய்வு மற்றும் வர்த்தக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

விலை விவர மற்றும் வர்த்தக ஆய்வுகளின் முடிவில், தக்காளி விலை நடப்பு பிப்ரவரி, 2015 மாதங்களில் மேலும் குறைந்து மார்ச் மாத இறுதி வரை நிலைத்திருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. அதன் பிறகு ஏப்ரல் இரண்டாவது வாரத்திலிருந்து விலை உயர வாய்ப்புள்ளது. மேலும், தக்காளியின் சராசரி பண்ணை விலை ஏப்ரல், 2015ல் கோயம்புத்தூர், ஒட்டன்சத்திரம் மற்றும் தலைவாசல் சந்தைகளில் கிலோவிற்கு ரூபாய் 6 - 10 வரை இருக்கும் எனவும் ஒசூர் சந்தைகளில் கிலோவிற்கு ரூபாய் 6 – 8 வரை இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. மேலும், மே - ஜுன் 2015 மாதங்களில் அதிகபட்ச விலை கிடைக்க வாய்ப்புள்ளது. இத்தகவலின் அடிப்படையில் விவசாயிகள் தங்களது தக்காளி விதைப்பை மார்ச் 2015 இரண்டாம் வாரம் முதல் ஏப்ரல் முதல் வாரம் வரையில் மேற்கொண்டு நல்ல விலை கிடைக்க அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**கத்திரி**

வர்த்தக ஆய்வுகளின் அடிப்படையில் தற்போது கோயம்புத்தூர், ஒட்டன்சத்திரம் மற்றும் தலைவாசல் சந்தைகளில் அதிகப்படியான வரத்து காணப்படுகின்றது. தற்போது கத்திரி விலை மேற்கண்ட மொத்த சந்தைகளில் கிலோவிற்கு ரூபாய் 5 முதல் 8 வரை உள்ளது. ஆனால், கடந்த நவம்பர் - டிசம்பர், 2014 மாதங்களில் கிலோவிற்கு ரூபாய் 25 முதல் 30 வரை இருந்தது. சேலம், கோயம்புத்தூர் மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் அதிகப்படியான சாகுபடி பரப்பு தற்போதைய பண்ணை விலை வீழ்ச்சிக்கு காரணமாக உள்ளது. தமிழ்நாடு வேளாண்மை துறையின் புள்ளி விவரங்களின் படி கடந்த அக்டோபர் மற்றும் நவம்பர் 2014 மாதங்களில் கத்திரி சாகுபடி பரப்பு கோயம்புத்தூர் (81 எக்டர்), சேலம் (531 எக்டர்) மற்றும் திண்டுக்கல் (463 எக்டர்) அதிகரித்து இருந்தது. மேலும், கடந்த டிசம்பர் 2014 - ஜனவரி 2015 மாதங்களில் சாகுபடி பரப்பு கோயம்புத்தூர் (61 எக்டர்), சேலம் (353 எக்டர்) மற்றும் திண்டுக்கல் (125 எக்டர்) குறைந்து காணப்படுகிறது.

மார்ச் – ஏப்ரல், 2015 மாதங்களில் விலை நிலவரம் பற்றி விவசாயிகள் அறிந்து கொள்ள ஏதுவாக கடந்த 11 வருடங்களில் கோயம்புத்தூர், ஒட்டன்சத்திரம், மற்றும் தலைவாசல் உழவர் சந்தைகளில் நிலவிய கத்திரி விலை விவரங்கள் ஆய்வு மற்றும் வர்த்தக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

விலை விவர மற்றும் வர்த்தக ஆய்வுகளின் முடிவில், மார்ச் – ஏப்ரல், 2015 மாதங்களில் அறுவடை சமயத்தில் கோயம்புத்தூர் சந்தையில் கிலோவிற்கு ரூபாய் 12 – 15 வரையும், ஒட்டன்சத்திரம் மற்றும் தலைவாசல் சந்தைகளில் கிலோவிற்கு ரூபாய் 10 – 12 வரையும் இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் விவசாயிகள் நடவுப் பணியை மேற்கொள்ள அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**வெண்டை**

தமிழ்நாட்டில் வெண்டை சாகுபடி ஜுன் - ஆகஸ்டு (ஆடிப்பட்டம்) மற்றும் பிப்ரவரி (தைப்பட்டம்)யில் பரவலாக மேற்கொள்ளப்படுகிறது. பொதுவாக வருடத்தின் ஜனவரி – பிப்ரவரி

மாதங்களில் வெண்டை அதிகபட்ச விலைக்கு விற்பனையாகும். குளிர் காலத்தில் வெள்ளை நுண்துகள் பூஞ்சான தாக்குதலுக்கு ஆளாவதால் நவம்பர் - டிசம்பர் மாதங்களில் குறைந்த சாகுபடி பரப்பில் பயிரிடப்பட்டு சந்தைக்கு கொண்டு வருவதே காரணமாகும். இதற்கு மாறாக கடந்த அக்டோபர் மற்றும் நவம்பர் 2014 மாதங்களில் வெண்டை சாகுபடி பரப்பு அதிகரித்ததன் காரணமாக தற்போது வரத்து அதிகரித்துள்ளது.

கடந்த 3 வருட தொடர் வறட்சி காரணமாக சாகுபடி பரப்பு பெரும்பாலான பண்ணைகளில் குறைந்து காணப்பட்டது. தமிழ்நாட்டின், வடகிழக்கு பருவ மழை நல்ல படியாக இருந்ததால் விவசாய சாகுபடியை மேற்கொள்ள கடந்த அக்டோபர் மற்றும் நவம்பர் 2014 மாதங்கள் ஏதுவாக அமைந்தன. அதனால், அதிகபடியான பரப்பு, வெண்டை சாகுபடி கோயம்புத்தூர் (55 எக்டர்) மற்றும் சேலம் (625 எக்டர்) மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு சாதகமான பருவ நிலை இல்லாத குளிர்காலத்திலும் அதிக வரத்திற்கு காரணமாக இருந்தது. ஆனால், அடுத்து வரும் டிசம்பர் 2014 - ஜனவரி 2015 மாதங்களில் சாகுபடி பரப்பு கோயம்புத்தூர் (10 எக்டர்) மற்றும் சேலம் (306 எக்டர்) மாவட்டங்களில் குறைந்து காணப்படுகிறது. இதனால் வரும் மார்ச் - ஏப்ரல் 2015 மாதங்களில் வரத்து குறைய வாய்ப்புள்ளது.

தற்போது வெண்டை விலை மேற்கண்ட மொத்த சந்தைகளில் கிலோவிற்கு ரூபாய் 5 முதல் 8 வரை உள்ளது. மார்ச் – ஏப்ரல், 2015 மாதங்களில் விலை நிலவரம் பற்றி விவசாயிகள் அறிந்து கொள்ள ஏதுவாக கடந்த 11 வருடங்களில் கோயம்புத்தூர், ஒட்டன்சத்திரம், மற்றும் தலைவாசல் உழவர் சந்தைகளில் நிலவிய வெண்டை விலை விவரங்கள் ஆய்வு மற்றும் வர்த்தக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

விலை விவர மற்றும் வர்த்தக ஆய்வுகளின் முடிவில், மார்ச் – ஏப்ரல், 2015 மாதங்களில் அறுவடை சமயத்தில் கோயம்புத்தூர் மற்றும் ஒட்டன்சத்திரம் சந்தைகளில் கிலோவிற்கு ரூபாய் 10 – 15 வரையும், தலைவாசல் சந்தையில் கிலோவிற்கு ரூபாய் 10 – 12 வரையும் இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் விவசாயிகள் நடவுப் பணியை மேற்கொள்ள அறிவுறுத்தப்படுகிறார்கள்.

<u>மேலும் விவரங்களுக்குதொடர்பு கொள்ள</u>

உள்நாட்டுமற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டுஆய்வு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி: 0422 -2431405

<u>மேலும் தொழில் நுட்ப விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்</u>

பேராசிரியர் மற்றும் தலைவர்,
காய்கறிப் பயிர்கள் துறை,
தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி எண் - 0422-6611374 / 0422-6611283

மக்கள் தொடர்பு அலுவலர்